**கூடுதல் மாவட்ட நீதிமன்றம், திண்டுக்கல்.**

**அசல் வழக்கு எண். 269/2020**

**வா.சா. – 1 ஆரோக்கியமேரி**

**நாள்.06.01.2023**

**1ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை**

ஞானப்பிரகாசமும், தர்மராஜீம் உடன் பிறந்தவர்கள். 2 முதல் 7 பிரதிவாதிகளின் தகப்பனார் தர்மராஜ். 1–ம் பிரதிவாதி ஞானப்பிராகத்திற்கு தாவா சொத்துக்களில் 1/3 பாகம் உள்ளது.

**2 முதல் 5 பிரதிவாதிகளின் தரப்பில் குறுக்கு விசாரணை.**

எனக்கு ஜான்சிராணி, விக்டோரிய ராணி என்று இரண்டு பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். எனது கணவரின் பெயர்அருளப்பன். எனது இரண்டு மகளும் பழனியில் சுமார் 50 வருட காலமாக குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது 2 வது கணவரின் பெயர் செல்வராஜ். செல்வராஜின் மகளின் பெயர் ஆரோக்கியம்மாள். ஆரோக்கியம்மாள் வேளாங்கன்னியில் குடியிருந்து வருகிறார். நான் ஆரோக்கியம்மாளுடன் நான் கடந்த 50 வருடங்களாக வேளாங்கண்ணியில் குடியிருந்து வருகிறேன். எனது தகப்பனார் 12.07.1972 ல் எனது பெயரிலும், எனது 2–வது கணவர் செல்வராஜ் பெயரிலும் 1 1/2 ஏக்கர் விஸ்தீரத்தை என் தந்தையார் வாங்கி வைத்தார் என்று சொன்னால் சரிதான் . அந்த சொத்தை நானும், எனது கணவர் செல்வராஜீமும் சேர்ந்து சொத்தை விற்றுவிட்டு , வேளாங்கண்ணிக்கு சென்றுவிட்டோம். எனது தகப்பனார் 3 ஏக்கர் சொத்தை கிரையம் வாங்கினார் . அந்த சொத்தை வாங்கும்போது கல்லும், கரடும் ,முள்ளும் இருந்தது. அந்த நிலங்களை எனது தம்பி தர்மரும், அவரது பிள்ளைகளான 2 முதல் 7 பிரதிவாதிகளும் சீர்செய்தார்கள் என்று சொன்னால் சரிதான் . அந்த சொத்தை கிரையம் வாங்குவதற்கு எனது தம்பி தர்மரும், அவரது மனைவியும் பணம் கொடுத்து எனது தகப்பனார் பெயரில் கிரையம் வாங்கினார். அந்த சொத்தை அவர்களே அனுபவித்து வருவதால் எனது தம்பி தர்மராஜ் பெயரிலும், அவரது பிள்ளைகளின் பெயரிலும் பட்டா மாற்றம் செய்யப்பட்டது என்றால் சரிதான். தர்மராஜீம் அவரது பிள்ளைகளும் தான் சொத்துக்கு தீர்வை செலுத்தி வருகின்றார்கள். அந்த சொத்தை சீர்செய்வதற்கு சுப்புராம் என்பவரிடம் எனது தம்பி சொத்தை அடமானம் வைத்து கடன் வாங்கினார் என்று சொன்னால் சரிதான். எனக்கு சையது என்ற கணவரும் உள்ளார். அவருக்கு 2 பெண்பிள்ளைகள். எனது திருமணத்தின்போது நகைகள், கல்யாண செலவுகள் அனைத்தும் எனது தம்பி தர்மராஜ் தான் செய்தார் என்றால் சரிதான் . தாவா சொத்து சிறுமலை கிராமத்தில்

உள்ளது. அதன் சர்வே நம்பர் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எனது தகப்பனார் வாங்கிய சொத்தில் நான் எந்த வேலையும் செய்யவில்லை என்று சொன்னால் மேடு, பள்ளமாக இருப்பதால் என்னால் வேலை செய்ய முடியவில்லை. அந்த சொத்திற்கு பக்கத்து தோட்டத்துக்காரர் சின்னப்பன் ஆக்கிரமிப்பு செய்ய முயற்சித்தார். அது சம்மந்தமாக தர்மனின் பிள்ளைகள் காவல்நிலையத்தில் புகார் கொடுக்க சென்றார்கள். நான் உடன் செல்லவில்லை. அந்த சொத்தில் தர்மர் மற்றும் அவரது பிள்ளைகள் சுமார் 40 லட்சம் வரை செலவு செய்து மரக்கன்றுகள் வைத்துள்ளார்கள் என்றால் சரிதான். எனது தகப்பனார் காலத்திலேயே எனக்கு தனியாக நிலம் வாங்கி கொடுத்தனால் தாவா சொத்தில் எனக்கு எவ்வித பாகமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தம்பி பிள்ளைகளிடம் பணம் வாங்குவதற்காக எனது மகளின் தூண்டுதலின் காரணமாக பொய்யாக வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எனது தயார் மற்றும் தகப்பனார் இருவரையும் எனது தம்பிதான் பார்த்துக்கொண்டார் என்று சொன்னால் சரிதான். அவர்களின் இறப்பிற்கு எனது தம்பிதான் செலவுகள் செய்தார் என்று சொன்னால் சரிதான். எனது தம்பி ,அவரது மனைவி மற்றும் அவர்களது பிள்ளைகளின் பேரில் சுமார் 50 வருடங்களாக தாவா சொத்திற்கு பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்துவருவதால் என்னுடைய உரிமை நசிந்து விட்டது என்று சொன்னால் சரியல்ல. வழக்கில் கோரியுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தது இல்லை என்று சொன்னால் சரியல்ல.

/ஒப்பம்/

XXXXXXX

Taken down by me in open court read over to the witness, admitted by him to be correct this contains a full and true account of the statement Made by the witness.

P SARAVANAN
Digitally signed by P SARAVANAN
Date: 2023.01.06 15:53:18 +0530

Additional District Judge,

Dindigul.